

# கர்ப்பப்பை புற்றுநோயிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

**உங்கள் கர்ப்பப்பை புற்றுநோய்ப் பரிசோதனைக்கு இன்றே செல்லுங்கள். உங்கள் அன்புக்குரியவர்களுக்காகப் பரிசோதனை செய்யுங்கள், உங்களுக்காகப் பரிசோதனை செய்யுங்கள்.**

மேலும் ஆரோக்கியமான SG திட்டத்தில் (HSG) பதிவுசெய்யப்பட்ட சிங்கப்பூர் குடிமக்களுக்கு, உங்கள் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் பரிசோதனைக்கு முழு மானியம் வழங்கப்படும். உங்கள் அடுத்த ஸ்கிரீனிங்கிற்கு நீங்கள் வரும்போது உங்கள் பதிவுசெய்யப்பட்ட (HSG) கிளினிக்கில் சரிபார்க்கவும்.


**screenforlife**.gov.sg
1800 223 1313*

ScreenforLife
Health Promotion Board

*1800 தொலைபேசி சேவைகளை கைப்பேசியிலிருந்து அழைக்கும்போது கட்டணம் விதிக்கப்படும்.

## கர்ப்பப்பை புற்றுநோய் என்பது என்ன?

கர்ப்பப்பை என்றழைக்கப்படும் கருப்பையின் கழுத்துப் பகுதியில் உண்டாகும் புற்றுநோய்தான் அது. நீண்ட காலமாக இருக்கும் மனித பாப்பிலோமா நோய்க் கிருமியின் (HPV) தொற்றால் இது ஏற்படுகிறது.




## மனித பாப்பிலோமா நோய்க்கிருமி (HPV) என்பது என்ன?

HPV என்பது ஒரு சாதாரணமான நோய்க்கிருமி. அது எல்லோரையும் ஏதாவதொரு காலகட்டத்தில் பாதிக்கும். அதில் 100க்கும் மேலான வகைகள் உள்ளன. ஆனால் சுமார் 14 வகை கிருமிகள்தான் கர்ப்பப்பை புற்று நோய்க்குக் காரணமாகும். அது உடலுறவின் போது, தோலோடு தோல் ஒட்டும்போது பரவக்கூடும்.

HPV ஒரு சாதாரண நோய்க்கிருமி என்பதால், நம்முடைய உடல் தானாகவே அந்தத் தொற்றை நீக்கிவிடும். ஆனால் அதிக ஆபத்துடைய HPV வகைகள் நீண்ட நாள் தொற்றை உருவாக்கி, அதன் மூலம் கர்ப்பப்பை புற்றுநோய் வரக்கூடும்.

## கர்ப்பப்பை புற்றுநோய் உருவெடுக்க எவ்வளவு காலம் ஆகும்?

கர்ப்பப்பை புற்றுநோய் மெதுவாக உருவெடுக்கும் ஒரு நோயாகும். பொதுவாக, கர்ப்பப்பை புற்றுநோய் உருவெடக்க 15 வருடங்கள் வரை ஆகலாம். அதனால்தான், வழக்கமான கால இடைவெளியில் பரிசோதனை செய்வது மிகவும் முக்கியமாகிறது. ஏனெனில், ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்தால், அதைக் குணமாக்க முடியும்.

## கர்ப்பப்பை புற்றுநோயின் ஆரம்பகால அறிகுறிகள் என்ன?

வழக்கமாக, கர்ப்பப்பை புற்றுநோய்க்கு ஆரம்பகால அறிகுறிகள் என்று எதுவும் இல்லை.

## யாருக்கெல்லாம் கர்ப்பப்பை புற்றுநோயால் பாதிக்கப்படக்கூடிய ஆபத்து இருக்கிறது?

பாலியல் செயல்பாடுகளில் ஈடுபடும் எல்லாப் பெண்களுக்கும் இந்த ஆபத்து உள்ளது. கீழ்க்கண்டவர்களுக்கு ஆபத்து அதிகம்:

- மிகவும் பலவீனமான நோய் எதிர்ப்புச் சக்தியை உண்டாக்கும் நோய் கொண்டவர்கள் (எ.கா: லுபஸ் எனப்படும் தோல் அழிநோய்).
- மனித நோயெதிர்த்திறனழி நோய்க்கிருமி (HIV) உள்ளவர்கள்.

## நான் எப்போது தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும் மற்றும் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்?


நீங்கள் 9 முதல் 26 வயதுக்கு இடைப்பட்டவராக இருந்தால், HPV தடுப்பூசி போட்டுக் கொள்ளுங்கள்.

**HPV** தடுப்பூசிப் பற்றி மேலும் விவரங்கள் அறிய **https://go.gov.sg/hpv-immunisation** இணையத்தளத்திற்குச் செல்லவும்

நீங்கள் 25 வயதுக்கு மேற்பட்டவராகவும், எப்போதாவது பாலியல் செயல்பாட்டில் ஈடுபட்டவராகவும் இருந்தால், கர்ப்பப்பை புற்றுநோய்ப் பரிசோதனைக்குச் செல்லுங்கள்.

## கர்ப்பப்பை புற்றுநோய்ப் பரிசோதனை செய்யும்போது என்ன நடக்கும்?

- இது வேகமாகவும் எளிதாகவும் செய்யப்படுகிற ஒரு பரிசோதனை. பரிசோதனைக்காகப் பெண்ணுறுப்பில் ஒரு கருவி மெதுவாக உட்செலுத்தப்படும்.
- ஒரு மென்மையான தூரிகையை உபயோகித்து உங்கள் கர்ப்பப்பையிலிருந்து சில உயிரணுக்கள் சேகரிக்கப்படும். பின்னர் இந்த உயிரணுக்கள் பரிசோதனைக்காகச் சோதனைக்கூடத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.



நீங்கள் 25 முதல் 29 வயதுக்கு உட்பட்டவராயிருந்தால், பேப் (Pap) சோதனை மூலம், உங்கள் உயிரணுக்களில் வழக்கத்திற்கு மாறான மாற்றங்கள் இருக்கின்றனவா என்பது சோதிக்கப்படும். இந்த வயதில் HPV தொற்றுகளை மிக விரைவாக நீங்கள் நீக்கிவிட முடியும் என்பதால், உங்களுக்கு HPV சோதனை தேவையில்லை.

நீங்கள் 30 அல்லது அதற்கு மேற்பட்ட வயதினராக இருந்தால், அதிக ஆபத்து விளைவிக்கும் கிருமி வகைகளைக் கண்டுபிடிக்க, உங்கள் உயிரணுக்கள் HPV சோதனைக்கு அனுப்பி வைக்கப்படும். இந்த வயதில், உங்களுக்குக் கர்ப்பப்பை புற்றுநோய் வரக்கூடிய ஆபத்தை HPV சோதனை மூலம் திறமையாகக் கண்டுபிடிக்கலாம்.

சோதனைக்குப்பின் நான்கு வாரங்களில் உங்கள் சோதனை முடிவுகள் தயாராகிவிடும். அதன்பின் எடுக்க வேண்டிய தொடர் நடவடிக்கைகள் தேவைப்பட்டால், உங்கள் மருத்துவர் ஆலோசனை அளிப்பார்.

## என்னுடைய சோதனை முடிவின் விளக்கம் என்ன?



### 25 முதல் 29 வயது வரை

**உங்களுக்கு:**

1) பேப் (Pap) சோதனையில் எந்தப் பிரச்சனையும் இல்லையென்றால், கர்ப்பப்பை உயிரணுக்கள் இயல்பாக உள்ளன. 3 வருடங்களுக்குப் பின், அடுத்த கர்ப்பப்பை புற்றுநோய்ப் பரிசோதனை செய்யுங்கள்.
2) பேப் (Pap) சோதனை முடிவு வழக்கத்திற்கு மாறாக இருந்தால், தொற்று மற்றும்/அல்லது வழக்கத்திற்கு மாறான கர்ப்பப்பை உயிரணுக்கள் இருக்கலாம். இதனால் உங்களுக்குக் கர்ப்பப்பை புற்றுநோய் இருப்பதாகக் கருதவேண்டாம். உங்கள் மருத்துவர் சோதனை முடிவுகளை மறுஆய்வு செய்து, தேவையான சிகிச்சை பற்றி ஆலோசனை அளிப்பார்.


### 30 அல்லது அதற்கு மேற்பட்ட வயது



**உங்களுக்கு:**

1) அதிக ஆபத்தை விளைவிக்கும் HPV வகை கிருமிகள் இல்லையென்றால், கர்ப்பப்பை புற்றுநோய் வரக்கூடிய ஆபத்து குறைவு. 5 வருடங்களுக்கு ஒருமுறை கர்ப்பப்பை புற்றுநோய்ப் பரிசோதனைக்குச் செல்லுங்கள்.
2) அதிக ஆபத்தை விளைவிக்கும் HPV வகை கிருமிகள் இருந்தால், கர்ப்பப்பை புற்றுநோய் வரக்கூடிய ஆபத்து அதிகம் என்பதால், நீங்கள் ஒரு பெண் நோயியல் மருத்துவரைக் காண பரிந்துரைக்கப்படுவீர்கள், தேவைப்பட்டால் சிகிச்சை அளிக்கப்படும்.
3) மற்ற ஆபத்தான HPV வகை கிருமிகள் இருந்தால், ஒரு வருடத்திற்குப் பிறகு மற்றுமொரு HPV சோதனைக்கு வருமாறு மருத்துவர் உங்களிடம் கேட்டுக்கொள்வார்.

## நான் என்னுடைய கர்ப்பப்பை புற்றுநோய்ப் பரிசோதனைக்கு எப்படி தயாராக வேண்டும்?



- உங்கள் மாதவிடாய் தொடங்கி இரண்டு வாரத்திற்குப் பிந்திய ஒரு தேதியை முன்பதிவு செய்துகொள்ளுங்கள்.
- பரிசோதனைக்கு முந்திய 48 மணி நேரத்தில் உடலுறவு கொள்வதைத் தவிருங்கள். அதோடு விந்தணுக்கொல்லிகள், கருத்தடைக் களிம்புகள், பெண்ணுறுப்புப் பசைகள், பெண்ணுறுப்பு மருந்துகள் அல்லது டாம்போன்களைப் பயன்படுத்துவதையும் தவிருங்கள்.




## கர்ப்பப்பை புற்றுநோய்ப் பரிசோதனைக்கான கட்டணங்கள்

### பேப் (Pap) சோதனைக்கான கட்டணங்கள்



**25 முதல் 29 வயது வரை**

$15 சிங்கப்பூரர்களுக்குப் பலதுறை மருந்தகங்களில்
$22.50 நிரந்தரவாசிகளுக்குப் பலதுறை மருந்தகங்களில்
$2 அல்லது $5 சிங்கப்பூரர்களுக்கு CHAS தனியார் மருந்தகங்களில்

### HPV சோதனைக்கான கட்டணங்கள்



**30 அல்லது அதற்கு மேற்பட்ட வயது**

$22.50 சிங்கப்பூரர்களுக்குப் பலதுறை மருந்தகங்களில்
$33.75 நிரந்தரவாசிகளுக்குப் பலதுறை மருந்தகங்களில்
$2 அல்லது $5 சிங்கப்பூரர்களுக்கு CHAS தனியார் மருந்தகங்களில்

**மேலும் ஆரோக்கியமான எஸ்ஜி (HSG) திட்டத்திற்குப் பதிவு செய்துள்ள சிங்கப்பூரர்கள், கர்ப்பப்பை புற்றுநோய்ப் பரிசோதனைக்கு முழு மானியம் பெறுவார்கள். அடுத்த பரிசோதனைக்கான காலம் நெருங்கும்போது, நீங்கள் பதிவு செய்துள்ள HSG மருந்தகத்திடம் கேட்டு உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.**

**வாழ்நாளுக்கான பரிசோதனை (Screen for Life) மானியங்களைப் பற்றி மேலும் தெரிந்துகொள்ளவும், நீங்கள் தகுதிபெறுகிறீர்களா என்பதை அறிந்துகொள்ளவும்,screenforlife.gov.sg என்ற இணையத்தளத்தைப் பாருங்கள்.**

HPB Pa 681 – 24 2 (June 2024)